# தமிழ் இலக்கியங்களில் பெண்ணியம்

# Feminism in Tamil Literature

***முனைவர் மு. நிசாந்த்***
உதவி பேராசிரியர்
மதுரை சமூக அறிவியல் கல்லூரி, மதுரை

**Dr. M. Nisanth**
*Assistant Professor*
*Madurai Social Science College, Madurai*

## ஆய்வுச் சுருக்கம்

*இன்றைய சமூகத்தில் ஆண் பெண் ஆகிய இருவரின் சமூக மதிப்பீடுகள் வேறுபட்டு தான் காணப்படுகிறது. காலம் காலமாக ஆண் என்பவன் அதிகாரப் பண்பை உடையவனாகவும் பெண் என்பவள் அவனுக்கு அடங்கி வாழ்பவளாகும் தான் காணப்படுகிறாள். ஒரு பெண் தன்னுடைய குழந்தை பருவத்தில் தன்னுடைய தந்தையை சார்ந்து வாழ வேண்டும். அதே பெண் தன்னுடைய திருமணத்திற்கு பிறகு தன்னுடைய கணவனை சார்ந்து வாழ வேண்டும் பின்பு தன்னுடைய முதுமை காலத்தில் தன்னுடைய மகனை சார்ந்துதான் வாழ வேண்டும் என்ற கட்டமைப்பை இந்த சமூகம் ஏற்படுத்தி இருக்கிறது மேலும் குடும்பம் பொருளாதாரம் அரசியல் மற்றும் பாலுறவு போன்றவற்றில் ஆண்கள் தங்கள் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப பெண்களை பயன்படுத்து கிறார்கள். ஆண் என்பவன் பெண்ணுக்காக படைக்கப்படவில்லை ஆனால் பெண் என்பவள் ஆணுக்காக படைக்கப்பட்டிருப்பதாக நம்புகிறார்கள் என்றும் ஆண் எனில் அனைத்திலும் செயல்திறன் படைத்தவனாகவும் பெண் எனில் அடக்கம், அமைதி, அறியாமை மற்றும் கீழ்ப்படிதல் போன்ற பண்புகளை கொண்டவளாக வாழ்ந்தாக வேண்டும். இத்தகைய நடைமுறையை தந்தை அதிகார சமூகம் ஆண்டாண்டு காலமாக கற்பிதம் செய்து வருகிறது.*

## Abstract

*In today's society, the social values of men and women are different. From time to time it is seen that the man has the authority and the woman is subservient to him. A girl has to depend on her father during her childhood. This society has created a structure that the same woman should live dependent on her husband after her marriage and then depend on her son in her old age and men use women according to their likes and dislikes in family, economy, politics and sex. They believe that man is not created for woman but woman is created for man and if man is efficient in everything and woman should live with qualities like modesty, peace, ignorance and submissiveness. Such a practice has been attributed to the patriarchal society for years.*

**Citation**

Nisanth, M. "Feminism in Tamil Literature." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 3, 2024, pp. 56–63.

*தமிழ் இலக்கியங்களில் எவ்வாறு பெண்கள் பற்றி பேசப்பட்டுள்ளார்கள். குறிப்பாக பெண் அடிமைத்தனம் எவ்வாறு வெளிப்பட்டு வந்திருக்கிறது. இதனை தொல்காப்பியம் சங்க இலக்கியங்கள் அதன் பின்பு வந்த பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், தற்கால இலக்கியம் மற்றும் நவீன இலக்கியம் இவைகளின் மூலம் விளக்குவதையே இக்கட்டுரை நோக்கமாக கொண்டுள்ளது*

**இலக்கியம் பற்றிய அறிமுகம்**

*இலக்கியம் என்பது ஒரு மொழியின் பண்பட்ட வெளிப்பாடாகும். கலை அறிவியல் இரண்டுமே இலக்கியத்தில் அடங்கும். ஆனால் பொதுவாக கவிதை, உரைநடை, நாடகம் போன்ற கலை இலக்கிய படைப்புகள் மட்டுமே அறியப்படுகின்றது. அறிவியலைக் காட்டிலும் கலை அழகியலின் வெளிப்பாட்டை இன்றியமையாததாக இலக்கியம் கொண்டிருப்பதாக கருதப்படுகிறது.*

*நாம் அறிந்த கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் பிறருக்கு எடுத்துக் கூறுகின்ற ஒரு கருவியாக மொழி விளங்குகின்றது. மொழியை பேசுகின்ற மக்களது உணர்ச்சிகளையும் கொள்கைகளையும், குறிக்கோள்களையும் எடுத்துக்கூறுகின்றவை இலக்கியங்களாகும்*

*சமுதாய மக்களின் வாழ்க்கைமுறை அவர்களுடைய லட்சியம் அவர்களுடைய இலக்கு போன்றவற்றை கற்பனைகளாகவும், எதார்த்தங்களாகவும் இலக்கியங்கள் படம் பிடித்துக்காட்டுகின்றன எனவே இலக்கியங்களை காலத்தின் கண்ணாடியாகவும் கருதலாம்*

*சங்ககாலம் முதல் தற்காலம் வரை இலக்கியங்கள் மக்களுடைய வாழ்க்கை முறையையும் அதனுடைய வளர்ச்சியையும் பிரதிபலிப்பவையாகவே காணப்படுகின்றன.*

*நேற்றைய வாழ்வியலை பின்புலமாக கொண்டு இன்றைய வாழ்நிலையை நெறிப்படுத்துவதுதான் இலக்கியத்தின் சமூகத்தேவை*

*தமிழ் இலக்கியம் 2000 ஆண்டுகளுக்கு மேலான அறுபடாத தொடர்ச்சி கொண்ட உலகின் சிறந்த இலக்கியங்களில் ஒன்று. வாழ்வின் பல்வேறு பண்பாட்டுக் கூறுகளை தமிழ் இலக்கியங்கள் கொண்டிருக்கின்றன. தமிழ் இலக்கியத்தில் வெண்பா குரல் புதுக்கவிதை கட்டுரை பழமொழி 90 வகை சிற்றிலக்கியங்கள் என பல வடிவங்கள் உள்ளன. தமிழ் தமிழில் வாய்மொழி இலக்கியங்களும் முக்கிய இடம் வகிக்கின்றது. எழுத்திலக்கியங்கள் தோன்றுவதற்கு முந்தையதான வாய்மொழி இலக்கியங்கள் தமிழ் இலக்கிய பரப்பில் இன்றியமையாத இடத்தை பெற்றுள்ளன. தாய்தலைமை சமூகத்தின் பிரதிபலிப்புகளை இத்தகைய இலக்கியங்களில் அறிவதற்கு இடமுண்டு என்பது வாய்மொழி இலக்கியத்தின் வரலாறு முக்கியத்துவம் ஆகும்.*

**பெண்ணியம்**

*பெண்ணியம் என்பது ஆணாதிக்கத்திற்கும் பாலின ஒடுக்கு முறைக்கும் எதிரானது இதற்கு சமூகத்தில் பெண்ணின் முழுமையான பங்கேற்பு, ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமைகள் சம சலுகைகள் சம ஊதியம் என்பவை குறைந்தபட்ச தேவை.*

**பெண்ணிய விளக்கம்**

*பெண்ணியம் என்பது பெண்களின் தனிப்பட்ட விடுதலை பற்றியது அல்ல மாறாக ஆணாதிக்க சமூக பண்பாட்டிற்கு எதிராக பெண்களின் ஒட்டுமொத்த சமூக விடுதலையை குறிக்கின்ற சிந்தனையாகும் அரசியல் பண்பாடு பொருளியல் என சமூகம் முழுவதும்*

*பெண்கள் தமக்கான உரிமைகளை மீட்டெடுப்பதும் விடுதலையை அடைவதும் பற்றியதுதான் பெண்ணியம்*

**பெண்ணிய தோற்றம்**

Feminism *என்ற ஆங்கில சொல் கிபி 19ஆம் நூற்றாண்டில் முதன் முதலில் பயன்படுத்தப்பட்டது பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்காங்கு பெண் விடுதலை சிந்தனை எழுச்சி பெற்றிருந்தது என்றாலும் பெண்ணியம் ஒரு கோட்பாடாக வலுப்பெற்றது கிபி 19ஆம் நூற்றாண்டில்தான் முதலாளித்துவத்திற்கு எதிராக எழுந்த மார்க்சிய வர்க்கப் போராட்டத்தில் ஆதிக்க வெறி கொண்டவர்களை எதிர்க்கும் நோக்கில் பெண்கள் போர் குணத்துடன் பங்கேற்றார்கள். இவர்களின் அத்தகைய போராட்டமானது நிறுவனங்களின் லாபவெறி எதிராக மட்டும் அமையாமல் ஆணாதிக்கத்திற்கு எதிராகவும், பெண் ஒடுக்குமுறைக்கு எதிராகவும் குரல் எழுப்பப்பட்டது இதுதான் பெண்ணியத்தின் வேர் என்றும் இதிலிருந்து தான் பெண்ணியம் ஒரு தனி கோட்பாடாக உருவாக்கப்பட்டது என்றும் மார்க்சிய பெண்ணியவாதிகள் கூறுகின்றார்கள்.*

*மனித வரலாற்று படிநிலையை பின்னோக்கிப் பார்த்தால் அதில் ஆதி பொதுவுடைமை சமூகத்தில், காடுசார்ந்த பொருள் சேகரிப்பு நாகரிகத்தில் தாய் தலைமை சமூகம் இருந்திருக்கிறது அங்கு தாய்தான் தனது கூட்டத்தை வழிநடத்தக் கூடிய தலைமை பண்பினை பெற்று இருந்திருக்கிறாள் பெண் என்பவள் முதன்மை பாலினமாக கட்டமைந்திருக்கிறாள். பின்பு, வேட்டை நகரத்திலும், கால்நடை மந்தை வளர்ப்பு நாகரிகத்தின் தொடக்கத்திலும் கூட தாய் தலைமை சமூகம் இருந்திருக்கிறது. அதன்பின்பு கால்நடை மந்தை வளர்ப்பு நாகரிகத்தின் இடைகட்டத்தில் தான் தாய் தலைமை சமூகம் அழிக்கப்பட்டு தந்தை அதிகார சமூகம் தோன்றுகிறது. எப்போது இந்த தந்தை அதிகார சமூகக் கூறுகள் தோன்றுகிறதோ அதிலிருந்து தான் இந்த ஆணின் ஆதிக்கம் பெண்ணின் மீது ஆதிக்கம் செலுத்த தொடங்கியது. இந்த ஆணின் ஆதிக்கமானது குடும்பத்திலும், பொருளாதாரத்திலும், மொழியிலும் மற்றும் பண்பாட்டு தளங்களிலும் கட்டமைக்கப்பட்டிருந்திருக்கிறது. இப்படி கட்டமைக்கப்பட்ட ஆணாதிக்கத்தை உடைத்து பெண்ணிற்கான புதிய தளத்தினை ஏற்படுத்துவதற்காக பெண்ணியவாதிகளால் உருவாக்கப்பட்ட கோட்பாடுதான் இந்த பெண்ணிய கோட்பாடு.*

*இன்று இலக்கிய துறையில் பெரிதாக பேசப்பட்டும் திறனாய்வுக்கு உட்படுத்தப்பட்டும் வரும் கோட்பாடுகளில் ஒன்று பெண்ணியம். இது தனித்த கோட்பாடு அன்று பல்வேறு கோட்பாடுகளில் இருந்து தனக்கானதை பெற்று அதன் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டு வரும் ஒரு புதிய கோட்பாடுதான் பெண்ணியக் கோட்பாடு. நவீனத்துவம், அமைப்பியல், பின்அமைப்பியல், மாக்சியம், மற்றும் பின்நவீனத்துவம் என்று அந்தந்த கோட்பாடுகளில் இருந்து தனக்கான களத்தை தேர்ந்து பெண்களுக்கான விடுதலையும், பெண் மொழியையும் பேசும் நவீன கோட்பாடாக பெண்ணியக் கோட்பாடு இன்று ஆக்கம் பெற்றுள்ளது*

*இப்பெண்ணிய கோட்பாடு முன்வைக்கும் வழிமுறைகளில் முதன்மையானவை இரண்டாகும் ஒன்று பெண்களை ஆணாதிக்க கட்டுப்பாட்டுக்குள் கட்டுப்படுத்தும் ஆணின் அதிகார மையத்தின் மீது தொடர்ந்து தாக்குதலை உண்டாக்குவதும் மற்றொன்று தனக்கான புறக்கணிக்கப்பட்ட வரலாற்றை மீண்டும் கட்டமைக்கும் உரையாடலை தொடர்ந்து நிகழ்த்துவது இவ்விரண்டும் பெண்ணிய நடைமுறையில் இன்றியமையாத வரலாற்று கடமையாகும்.*

**தொல்காப்பியத்தில் பெண்ணியம்**

*தமிழில் நமக்கு கிடைத்த மிகப் பழமையான நூல் தொல்காப்பியமாகும் இந்நூலின் ஆசிரியர் தொல்காப்பியர் ஆண் பெண் இருபாலரின் பண்புகளை பற்றி குறிப்பிடும் போது கீழ்வருமாறு ஆண்களின் பண்புகளை குறிப்பிட்டு இருக்கிறார்*

***பெருமையும் உரனும் ஆடூஉ மேன (தொல்.களவியல்)***

*அதாவது பெருமையான பிறப்பும் வலிமையையும் உடையது ஆணின் இயல்பாகும் என்று ஆண்களைப் பற்றி மிக உயர்வாக பேசுகிறார். அதே நேரத்தில் பெண்களை பற்றி குறிப்பிடும் போது*

***அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்***
***நிச்சமும் பெண்பாற் குரியஎன்ப (தொல். களவியல்)***

*அச்சம் நாணம் மடனும் நிச்சயம் பெண்பாற் குரியஎன்ப என்பது அதாவது அச்சம் என்றால் பயம், மடம் என்பது அறியாமை, நாணம் என்பது வெட்கம் இந்த மூன்று குணங்களும் நிச்சயமாக பெண்களுக்கு இருக்க வேண்டுமென்று தொல்காப்பியர் தனது நூலில் குறிப்பிட்டு இருக்கிறார். அதாவது தொல்காப்பியர் தான் வாழ்ந்த காலத்தின் சமூக எதார்த்தத்தை ஆணாதிக்கத்திற்கு உட்பட்ட பெண்களின் நிலை இவ்வாறு வரையத்திருக்கிறார்.*

**சங்க இலக்கியங்களில் பெண்ணியம்**

*பண்டைய கால மக்களின் வாழ்வினை தெளிவாக எடுத்துக்காட்டும் கருவியாக அமைந்தவை சங்க இலக்கியங்கள். சங்க இலக்கியம் என்பது எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும்.*

*உலக வரலாற்றில் நடைபெற்ற பல போர்கள் மண், பொன், பெண் என்னும் மூன்றுக்காக நடைபெற்று இருக்கின்றன.*

*எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான புறநானூற்றில் மகட்பாற் காஞ்சி என்பது ஒரு அரசன் இன்னொரு அரசனிடம் பெண் கேட்டு செல்கிறான், ஆனால் அந்த அரசன் பெண் கொடுக்க மறுத்து விடுகிறான். அந்த அரசன் மீது கோபம் கொண்டு போர்த்தொடுக்கிறான். இந்த பெண்ணுக்காக ஏற்படுகிற போர் பற்றி குறிப்பிடுவது மகப்பேறு காஞ்சி ஆகும்.*

*பெண் கேட்டு வந்தவர்களை மறுத்த காரணத்தால் பகையும் போரும் உருவானது இதனை கண்ட மருதன் இளநாகனார் என்ற புலவர் இவள் தாய் இவளை பெறாமல் இருந்திருந்தால் நன்றாக இருக்குமே" என்று வருந்துவதாக புறம் 348 குறிப்பிடுகிறது. பகைவர்கள் நாட்டுக்குள் புகுந்து பாழ்படுத்தும் நிலை இவளால் அன்றோ விளைந்தது என்று புலவர் இறங்கி கூறுகிறார். அழகான இவள் ஊருக்கு கேடு விளைவிப்பதற்காகவே பிறந்தவள் ஆவாள். காட்டிலுள்ள பெருமரத்தில் பற்றிய தீ காட்டை அழிப்பது போல இவள் ஊரையே அழிப்பவள் ஆவாளே எனக் குறிப்பிடுகிறார். ‘‘மரம்படு சிறுதீப் போல அணங்காயினள் தான் பிறந்த ஊர்க்கே’’ (புறம் 349:6,7).*

*இங்கே புலவர் குறிப்பிடுவது பெண் அழகாகப் பிறந்தது தவறு. இவள் அழகாக பிறக்காமல் இருந்திருக்கலாம்" எப்படி ஒரு காட்டிலுள்ள பெருமரத்தில் தீ பற்றி காட்டை அழிப்பது போல இவர் அழகாகப் பிறந்ததனால் இந்த நாடே அழியப்போகிறது என்று அந்த பெண்ணை வஞ்சிப்பது இங்கே பெண் அடிமைத்தனத்தைகுறிப்பிடுவதாக அமைகிறது..*

*பதிணென் கீழ்க்கணக்கு நூல்களில் பெண்ணியம்*

*பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்பது சங்கம் மருவிய காலத்தில் தான் தோன்றின. இந்த காலம் இருண்ட காலம் என்று கூறுவார்கள். இந்த காலகட்டத்தில்தான் களப்பிரர்கள்*

*வாழ்ந்ததாக வரலாற்று சான்றுகள் கூறுகின்றன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் சிறுபஞ்சமூலம் திரிகடுகம் முதுமொழிக்காஞ்சி மற்றும் திருக்குறள் இவைகளின் மூலம் ஆணாதிக்க வெளிப்பாட்டினை உணரலாம்*

***கொண்டான் வழியொழுகல் பெண்***
***மக்கட் பெறுதல் மடனுடைமை மாதுடைமை***
***ஒக்க உடனுறைதல் ஊணமைவு - தொக்க***
***அலவலை அல்லாமை பெண் மகளிர்க்கு ஐந்தும்***
***தலைமகனைத் தாழ்க்கு மருந்து (சிறுபஞ்சமூலம்)***

*மக்கள் பெறுதல் என்பது குழந்தை பெற்றுக் கொடுத்தல், அடக்கமுடைமை என்பது கணவனிடம் அடக்கமாக இருத்தல் வேண்டும் என்பதும். அழகுடமே என்றால் கணவன் பார்ப்பதற்கு மனைவி எப்போதும் அழகாக இருக்க வேண்டும். கணவனோடு உறைதல் என்றால் கணவனோடு உள்ளதால் இணைந்தே இருப்பது எப்பொழுதும் கணவனோடு நினைப்பில் இருக்க வேண்டும் அதேபோல் கணவனின் உணவின் மிகுதியை உண்ண விரும்புதல் என்பது கணவன் சாப்பிட்டு வைத்த எச்சில் உணவை மனைவி உண்பதற்கு விருப்பப்பட வேண்டும். இந்த ஐந்தையும் செய்யக்கூடிய மனைவிதான் கணவனுக்கு மருந்தாக இருக்க முடியும் என்று சிறுபஞ்சமூலம் கூறுவது. ஆண் ஆதிக்கத்தை இங்கு வெளிப்படுத்துகிறது.*

***கொண்டான் குறிப்பறிபவள் பெண்டாட்டி (திரிகடுகம்)***

*கணவனின் குறிப்பறிந்து செயல்படுபவள்தான் உண்மையான மனைவி அதாவது கணவன் என்ன மனதில் நினைத்துக் கொண்டிருக்கிறார், என்ன எதிர்பார்க்கிறார் என்பதையெல்லாம் கணவன் சொல்லாமலே மனைவி அறிந்து செயல்பட வேண்டும் என்று திரிகடுகம் கூறுகிறது. இதுவுமே இங்கு ஆண் ஆதிக்கத்தை தான் குறிக்கிறது*

***நீரறிந் தொழுகாதாள் தாரமல்லர் (முதுமொழிக்காஞ்சி)***

*கணவன் சொல்வதையெல்லாம் கேட்டு நடக்காதவள் மனைவியே கிடையாது என்று முதுமொழிக்காஞ்சி கூறுவது பெண் அடிமைத்தனத்தை வெளிப்படுத்துகிறது*

***தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்***
***பெய்யெனப் பெய்யும் மழை திருக்குறள்***

*இந்தக் குறளின் பொருள் மனைவி தெய்வத்தினை வணங்காமல், தன் கணவனை தெய்வமாக வணங்குபவள். கற்புடையவள். அவள் பெய்யெனக் கூறினாள் மழை பெய்யும் என்பது பொருள்.. இந்த குரலிலே திருவள்ளுவர் மனைவியானவள் தன் கணவனை தெய்வமாக வழிபட வேண்டும் என்று குறிப்பிடுவது இங்கே பெண் அடிமைத்தனத்தை குறிப்பிடுகிறது*

**பாரதியின் பார்வையில் பெண்ணியம்**

*அதிர்ந்து சிரிக்காதே, சத்தமாக பேசாதே, அடக்கமாக இருக்க வேண்டும் என்று பெண்களை அடிமைப்படுத்திய வைத்திருந்த காலத்திலேயே நிமிர்ந்து நடையும் நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகள் திமிர்ந்த ஞானச் செருக்கும் என்ற புதுமை பெண்ணுக்கான இலக்கணத்தை உருவாக்கியவர் தான் பாரதியார்*

***ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்***
***வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்***
***பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்***
***எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண் இழைப்பில்லை காண் என்று கும்மியடி***
***(பெண்கள் விடுதலை கும்மி)***

*என்று கும்மி பாட்டின் மூலம் பெண் விடுதலை பற்றி பாடியுள்ளார்.*

*பெண் விடுதலையை பற்றி ஆரம்பம் முதல் தன் பல்வேறு இன்னல்களுக்கிடையே பேசியவர் பாரதியார். அனைவரையும் போல் பேசுவதோடு மட்டும் நின்றுவிடாமல் அதை தன் வாழ்வில் தன் குடும்பத்தில் செயல்படுத்தியது பாரதியாரின் தனி சிறப்பாகும். தற்கால இலக்கிய பிரதிநிதியாகிய பாரதி பெண்ணிய சிந்தனைகளை இவ்வாறாக படைத்துள்ளார்.*

**பெரியாரின் பார்வையில் பெண்ணியம்**

*அறியாமை, சாதிக் கொடுமை, தீண்டாமை, ஆண் ஆதிக்கம், பெண் அடிமைத்தனம் இவைகளுக்கெல்லாம் எதிராக குரல் கொடுத்த கழகக்காரர்தான் தந்தை பெரியார். தந்தை பெரியார் என்ற ஒரு மாமனிதர் இல்லையென்றால் நமக்கெல்லாம் சமூக நீதி என்ற வார்த்தையே தெரியாமல் போயிருக்கும். இவர் பெண்ணியம் பற்றி கூறும்போது பெண் விடுதலை என்பது ஆண்களால் சாத்தியமில்லை. எப்படி பூனைகளிடம் இருந்து எலிகளுக்கு விடுதலை கிடைக்காதோ அதேபோல்தான் இந்து பிராமணர்களிடமிருந்து பிராமணர் அல்லாதவர்களுக்கு விடுதலை கிடைக்காதோ அதே போல்தான் ஆண்களிடம் இருந்து ஒருபோதும் பெண்களுக்கு விடுதலை கிடைக்காது. ஆண்மை என்ற தத்துவம் அழித்து ஒழிக்கப்பட்டால் அன்று பெண்களுக்கு விடுதலை இல்லை என்பது உறுதி. மேலும் கற்பு என்ற ஒற்றை சொல்லை வைத்து தான் ஆண்கள் பெண்களை அடிமைப்படுத்துகிறார்கள் எனவே பெண்கள் கற்பு என்ற கருத்தியலை உடைத்தால் தான் பெண்களுக்கு விடுதலை ச ாத்தியம். திருமணம் என்ற ஆணாதிக்க முறையை ஒழிக்க வேண்டும் ஏனென்றால் குடும்ப அமைப்புக்குள் தான் பல கட்டுப்பாடுகளை விதித்து பெண்களை அடிமைப்படுத்துகிறார்கள் அதேபோல் விதவை மறுமணத்தையும் பெரியார் ஆதரித்திருக்கிறார்*

**தற்கால இலக்கியத்தில் பெண்ணியம்**

*தற்கால இலக்கியம் என்பது சமகாலத்தில் வெளியான அச்சிதழ், மின்னிதழ், நூல்கள் போன்றவற்றில் எழுதப்பட்ட அனைத்து இலக்கியங்களும் தற்கால இலக்கியங்கள் ஆகும் இந்த காலகட்டத்தில்தான் பெண் எழுத்தாளர்கள் அதிகமாக அறிமுகமாகிறார்கள். அவர்களில் மிக முக்கியமானவர்கள்*

*எழுத்தாளர் சல்மா, எழுத்தாளர் பாமா, பேராசிரியர் அரங்கமல்லிகா. எழுத்தாளர் மாலதி மைத்திரி. மனநல மருத்துவர் ஷாலினி, எழுத்தாளர் அ.மங்கை, எழுத்தாளர் ஓவியாபோன்ற இன்னும் பல ஆளுமைகள் ஆவார்கள். இவர்களுடைய பெண்ணியம் தொடர்பான இலக்கிய படைப்புகள் மிக முக்கியமானதாகும்.*

**முடிவுரை**

*இந்திய சமூகமானது ஆணாதிக்க சமூகமாகத்தான் கட்டமைக்கப்பட்டிருக்கிறது இந்த கலாச்சாரத்தில் ஆண். பெண் பாகுபாடுகள் நிறைந்துள்ளது. குழந்தைகளை வளர்க்கும் போதே ஆண் பெண் வேறுபாட்டுடன் தான் வளர்க்கிறோம் ஆண் குழந்தைகளுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது அதே நேரத்தில் பெண் குழந்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்றாலும் பரவாயில்லை மிகவும் தாழ்த்தி தான் வளர்க்கப்படுகிறார்கள். அது ஒரு பெண் குழந்தை அறிவு பூர்வமாக பேசினால் அவளை வாயாடி என்று கூறுகிறோம் அதே நேரத்தில் ஆண் குழந்தை அறிவு பூர்வமாக பேசினால் அவனை அறிவாளி என்று கொண்டாடுகிறோம். குழந்தைகளை குழந்தைகளாக அணுகாமல்*

*ஆணாகவும் பெண்ணாகவும் பிரித்தும் ஏற்றத்தாழ்விற்கு உள்ளாக்கியும் மதிப்பிட்டு அணுகுகின்ற இந்த மாறுபாடு தான் மாற்றப்பட வேண்டும்.*

*பொதுவாக பெண் குழந்தைகளிடம் தான், ஆண்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுரைகள் கூறி வளர்க்கிறோம். ஆனால் இதேபோல் ஆண் குழந்தைகள் எப்படி பெண்களிடம் நடந்து கொள்ள வேண்டும். எப்படி பழகுவது, அணுகுவது, மரியாதைடன் நடந்து கொள்வது என்று சொல்லி வளர்க்க தவறிவிடுகிறோம் எப்பொழுது சமூக நிலைமைகளில் ஆண் குழந்தைகள் சரியாக வளர்க்கப்படுகிறார்களோ. அப்போதுதான் ஆண்களின் பார்வை மாறுபடும். ஆணாதிக்க சமூகம் உடைபடும், பெண்களின் சமூக விடுதலை சாத்தியப்படும்*

*பெண்ணை பற்றி ஆணுக்கு சரியான புரிதல் வேண்டும் அதாவது பெண் என்பவள் ஆண்களுக்கான சக மனிதர் என்றொரு சரியான புரிதலை ஆண்களிடத்தில் ஏற்படுத்த வேண்டும் அது மட்டுமல்லாமல் கல்வி, அரசியல் பண்பாடு, பொருளாதாரம் மற்றும், குடும்பம் என அனைத்து தளங்களிலும் பெண்களை ஆண்களுக்கு சரி சமமாக நடத்துதல் வேண்டும்.*

*எந்த ஒரு சமூகம் பெண்களையும் ஆண்களையும் சரிசமமாக மதித்து முன்னேறுகிறதோ, எந்த ஒரு சமூகம் பெண்களின் சமூக முன்னேற்றத்திற்காக பாடுபடுகிறது அந்தச் சமூகம் தான் வளர்ச்சி பாதையை நோக்கி செல்கிறது என்று உணரலாம். அத்தகைய வளர்ச்சி பாதைக்கு இட்டுச்செல்லும் கருத்தியலாக பெண்ணியம் இலக்கியங்களில் வெளிச்சம் இடுகின்றது.*

**துணை நூல்கள்**


1. *பா. சிவானந்தவல்லி, பாரதியும் பெண் விடுதலையும், சான்லாக்ஸ் பன்னாட்டு தமிழியல் ஆய்வுகள், மலர் 2, இதழ் 4, 2018.*
2. *தந்தை பெரியார், பெண் ஏன் அடிமையானால்.*
3. *ச சுபாஷ் சந்திரபோஸ், தமிழ் களஞ்சியம், 3 தொல்காப்பியம், 2018.*
4. *முனைவர் தே ஞான தேசிகன், பெண் வாழக்காறுகள், பெண்ணிய கோட்பாட்டு பார்வை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 2014.*
5. *இரா. மகேஸ்வரி, வண்ணங்கள் மாறுவதில்லை என்னும் சிறுகதை சித்தரிக்கும் பெண்களின் சமூக நிலை, சான்லாக்ஸ் பன்னாட்டு தமிழியல் ஆய்வுகள், மலர் 2, இதழ் 3, 2018.*
6. *மருத்துவர் ஷாலினி, பெண்ணின் மறுபக்கம் விகடன் பிரசுரம், 2018.*
7. *கதி. முருகேசன், புறநானூற்றில் மகட்பாற் காஞ்சி துறை- சான்லாக்ஸ் பன்னாட்டு தமிழியல் ஆய்வுகள், மலர் 2, இதழ் 2, அக்டோபர் 2007.*
8. *விக்கிபீடியா தமிழ் இலக்கியம்,* tam.wikipedia.org.
9. *புதியவன் முனைவர் சிவக்குமார் கே. இலக்கிய அறிவியல், இணையம் கிண்டில் அமேசான், 2021*
10. *ச. தமிழ்ச்செல்வன், பெண்மை என்றொரு கற்பிதம், பாரதி புத்தகாலயம், 2018.*
11. *ஓவியா, பெண்ணும் ஆணும் ஒண்ணும, நிகர் மொழி பதிப்பகம், 2023.*
12. *பூ. மு. அன்பு சிவா, இரா காமராசுவின் கவிதைகளில் பெண்ணிய நிலையும் ஆளுமை கோட்பாடுகளும், சான்லாக்ஸ் பன்னாட்டு தமிழியல் ஆய்வுகள், மலர் 2, இதழ் 3, 2018.*
13. *மகன் பார் காஞ்சிபுரம்*

**References**

1. Pa. Sivanandhavalli, Bharati and Women's Liberation, Shanlax International Tamil Studies, vol. 2, no. 4, 2018.
2. Father Periyar, Why a woman becomes a slave.
3. S. Subhash Chandra Bose, Tamil Archive 3, Tolkappiyam, 2018.
4. Dr. Te Gnana Desikan, Women's Lives, Feminist Theoretical Perspective, New Century Book House(B) Ltd, 2014
5. Ira. Maheshwari, The Social Status of Women as depicted in the short story "Varnavarna Charimahi", Shanlax International Tamil Studies, vol. 2, no. 3, 2018.
6. Doctor Shalini, The Other Side of Woman, Vikatan Publication, 2018.
7. Fate. Murugesan, Magatbal Kanchi Department in Purananoor, Shanlax International Tamil Studies, vol. 2, no. 2, 2007.
8. Wikipedia Tamil literature,tam.wikipedia,org.
9. Fresher Dr. Sivakumar K., Literary Science, Web Kindle Amazon, 2021.
10. Ch. Tamilchelvan, An Attribution of Womanhood, Bharathi Budhkalayam, 2018.
11. Oviya, Woman and Man are One, Net Language Publishing House, 2023.
12. Malar. M. Anbu Siva, Feminist Position and Personality Theories in Ira Kamarasu's Poems, Shanlax International Tamil Studies, vol. 2, no. 3, 2018.
13. Magan bar Kanchipuram.